
# தமிழியல் ஆய்வுத் தடங்கள்

(தேசியக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)



பதிப்பாசிரியர்கள்

ப. ஆனந்தகுமார்

கு. கார்த்திகா

ஆ. ரூபா

ம. வித்யா

Scanned with CamScanner

**தமிழியல் ஆய்வுத் தடங்கள்**
**(தேசிய கருத்தரங்கக் கட்டுரைகள்)**

முதல் பதிப்பு : மார்ச் 2016

உரிமை : பதிப்பாசிரியர்கள்

பக்கங்கள் : 888

வெளியீடு : **போதிவனம்**
அகமது வணிக வளாகம், தரைத்தளம்,
12/293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
அலைபேசி: +91 - 9841450437
bodhivanam@gmail.com

நூல் வடிவமைப்பு : கே.எஸ். கருணா பிரசாத்

விலை : **600**

**Thzmizhiyal Aaivu Thadangal**
**(Research papers presented in National Seminar)**

First Edition : March 2016

Copyright : Editors

Pages : 888

Publisher : **Bodhivanam**
Ahmed Complex Ground Floor,
12/293, Royapettah High Road,
Royapettah, Chennai-600 014.
Mobile : +91 - 9841450437

Design : K.S. Karuna Prasad

Price : **600**

ISBN No. : 978-93-80690-36-0

| | | | |
|---|---|---|---|
| 11. | அன்புராணி.செ | இடைக்காலச் சமய வரலாற்றில் பௌத்தம் | 90 |
| 12. | அனிதா. ஏ | சங்க இலக்கியத்தில் உவமைகள் | 97 |
| 13. | அனிதா.பி | தமிழ் கல்வியில் வினாத்தாள் மதிப்பீடு | 101 |
| 14. | அனுமுத்துராஜ்.மு | ஐங்குறுநூற்றில் தலைவன் கூற்றுப்பாடல்களில் உவமை | 108 |
| 15. | ஆரோக்கிய தாஸ்.பா | ஆய்வறிஞர் ப.அருளி அவர்களின் ஆய்வுப் பணி மதிப்பீடு (அயற்சொல் அகராதி) | 115 |
| 16. | ஆரோக்கிய தாஸ்.பா | தமிழர்களின் உள்ளப் பிழம்பு தழல் இதழின் தாக்கம் – ஓர் ஆய்வு | 122 |
| 17. | ஆறுமுகம்.சி | திராவிட இயக்கமும் தமிழ் இலக்கியமும் | 126 |
| 18. | ஆறுமுகம்.பி | இக்கால தமிழ்ச் சிறுகதைகளில் மாய எதார்த்தவாதக் கூறுகளின் தாக்கம் | 130 |
| 19. | ஆனந்தகுமார்.ப | தமிழியல் ஆய்வுத்தடத்தில் நா.சஞ்சீவியின் சங்க இலக்கியப் பணிகள் | 137 |
| 20. | ஆனந்தி.செ | ஆ.பழநியின் சிலப்பதிகார நோக்கு | 142 |
| 21. | இந்திரகுமார்.ஜெ | சங்க இலக்கியங்கள் உணர்த்தும் இறைவழிபாடு | 149 |
| 22. | இராஜாராம் .சி | இலக்கியம் – ஓர் ஆய்வு | 154 |
| 23. | இலக்கியா.சோ | தமிழ்ச் சமூகத்தில் அச்சுத் தொடர்பியலும், புலமையாக்கத் துறையில் நிகழ்ந்த மாற்றமும் | 159 |

# இடைக்காலச் சமய வரலாற்றில் பௌத்தம்

**முனைவர் செ. அன்புராணி**
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி,
மதுரை

**முன்னுரை**

இந்தியாவில் தோன்றிய மிகப்பெரிய சமுதாயப் புரட்சிவாதி கௌதமபுத்தர். அவரே பௌத்த சமயத்தைத் தோற்றுவித்தார். ஆரிய பிராமண ஆதிக்கப்பிடியில் சிக்கித் தவித்த சாதிமுறைகளுக்கு, எதிரான சமயக்கோட்பாடுகளை அவர் உருவாக்கினார். சூத்திரர்களைப் பௌத்த மதத்தில் இணைத்துக் கொண்டார். சமுதாயத்தில் தாழ்ந்த இடம் கொடுக்கப்பட்டு இன்னலுற்ற பெண்களைத் தன் சமயத்துள் இணைத்து உயர்ந்த சமயப்பிரச்சாரர்களாக்கினார். பெண்களுக்கும் சூத்திரர் களுக்கும் கல்வியில் உரிமையளித்தார்.

வேதமறுப்புத் தத்துவங்களை வெளிப்படையாகக் கூறும் பௌத்தம் இந்திய வரலாற்றில் மிகச்சிறந்த சமயமாகத் திகழ்ந்தது. ஆனாலும் அரசியல் தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் மேற்கொண்ட ஆரிய பிராமண ஆதிக்கவாதிகளால் இந்தியாவில் புத்தமதம் தழைக்காமல் போனது. எனினும் இந்திய சமய வரலாற்றில் மாபெரும் மாற்றங் களைக் கொண்டு வர புத்தரின் சிந்தனைகள் காரணமாக அமைந்தன என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. குறிப்பாக வடஇந்தியாவில் சமூகப் புரட்சி செய்த மகாத்மா பூலே, அண்ணல் அம்பேத்கர் முதலியோருக்கும், தென்னிந்தியாவில் சமூக மாற்றித்திற் காகப் போராடிய அயோத்திதாசப்பண்டிதர், தந்தைபெரியார் முதலியோருக்கும் பகுத்தறிவுவாதச் சிந்தனைகளை வழங்கியது கௌதமபுத்தரின் கொள்கைகளே எனலாம். தமிழ்நாட்டில் பௌத்த சமயம் சங்ககாலந்தொட்டே காணப்படுகிறது. மொழி, இலக்கியம், இலக்கணம் முதலிய துறைகளிலும் பௌத்தர்கள் சிறந்திருந்ததை இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. வைதீக சமயங்களின் வெறுப்புக்கும், எதிர்ப்புக்கும் இடையில் பௌத்தர்கள் தம் பணியைச் செவ்வனே செய்து வந்தனர். அவர்தம் நிலைப்பாடு இடைக்காலச் சூழலில் எவ்வாறிருந்தது என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.